**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No.50/2022**

**Date :26.03.2026**

**பி.வா.சா.1 – சொர்ணகுமார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாசாஆ 2 அடமானப் பத்திரம் கணபதியார் பிள்ளை என்பவர் எனது தகப்பனார் வேலாயுதம் பிள்ளைக்கு எழுதிகொடுத்தது என்றால் சரிதான். வாசாஆ 2 ல் கணபதியார் பிள்ளை தனக்கு உரிமைப்பட்ட சொத்தை அடமானம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். மேற்படி வாசாஆ 2 ல் குறிப்பிட்டுள்ள சொத்தும் வழக்குப் பட்டிகை சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். வாசாஆ 2 அடமானப் பத்திரத்தின் காலம் 4 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 ல் அடமான தொகைக்கு கணபதியார் பிள்ளை வேலாயுதம் பிள்ளைக்கு வட்டி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ 2ன் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 3 அடமானப் புறக்கடப் பத்திரம் என்றால் சரிதான். வாசாஆ 3 ஆவணம் கணபதியார் பிள்ளை வேலாயுதம் பிள்ளைக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 3 லும் கணபதியார் பிள்ளை தனக்கு உரிமைப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வாசாஆ 3 ல் ரூ.31,000/- கூடுதல் அடமான கடன் பெற்றதாக கணபதியார் பிள்ளை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 3 ல் கூடுதல் அடமான கடனுக்கான காலம் 5 வருடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வழக்குப் பட்டிகை சொத்து மற்றும் வாசாஆ 2 மற்றும் வாசாஆ 3 ல் உள்ள சொத்து

அனைத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். வாசாஆ 3 எழுதி வாங்கும் சமயத்தில் முன் அடமானப் பத்திரத்திலுள்ள கடனுக்கான வட்டி குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் மொத்த அடமான கடன் ரூ.42,000/- என்றால் சரிதான். மேற்படி அடமானக் கடன் படி வட்டி தரவேண்டும் என்று நானோ எனது தந்தையோ வேலாயுதம் பிள்ளைக்கு எவ்வித கடிதமும் எழுதவில்லை என்றால் சரிதான்.

மேற்படி அடமானச் சொத்தை வட்டிக்கு வகை வைத்து அதிலுள்ள வருமானத்தை எடுத்துக் கொள்ள சொன்னதால் வட்டி குறித்து எவ்வித கேள்வியும் இதுவரை எழவில்லை என்றால் சரிதான். நாளது தேதி வரையிலும் அடமான சொத்து என் கைவசம் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து கன்னியாகுமரி கிராமம் புல எண் 40/21ல் உட்பட்ட 51 செண்ட் என்றால் சரிதான். வாசாஆ 6 பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 6 கூட்டு பட்டாவில் கோபாலராமகிருஷ்ணன் பிள்ளை மகன் கணபதியார் பிள்ளை மகன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ 6 பட்டா மொத்தம் 26 ஏருக்கான பட்டா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 26 ஏர் என்றால் 65 செண்ட்க்கு சமமானது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து 51 செண்ட்டை நீக்கி மீதமுள்ள 15 செண்ட் தான் ட்ரஸ்டுக்கு உரியது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கு கணபதியார் பிள்ளை பெயரில் வாதிகள் கரத் தீர்வை செலுத்தி வந்தார்கள் என்றால் அது குறித்து தெரியாது. வாசாஆ 5 கரத் தீர்வை ரசீது கணபதியார் பிள்ளை பெயரில் உள்ளது என்றால் அது குறித்து தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தை மீட்க வேண்டி வாதிகள் எனக்கு வாசாஆ 7 வழக்கறிவிப்பு 20.10.2021 அன்று அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான்.

மேற்படி வாசாஆ 7 வழக்கறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 7 வழக்கறிவிப்பிற்கு தற்போது வரையிலும் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு குறித்து மட்டும் தான் தெரியும். அடமான மற்றும் அடமான புறக்கடன்கள் தொகைகள் மொத்தம் ரூ.42,000/- என்னிடம் தரும் பட்சத்தில் அடமான சொத்தை எழுதிக் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அடமான சொத்து ட்ரஸ்ட்டுக்கு உரியது. தவறான சொத்தை உரிமை இல்லாமல் எழுதி தரப்பட்டதாக கூறி நானோ எனது தகப்பனார் வேலாயுதம் பிள்ளையோ பிரதிவாதிகளோ அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை.

வழக்கு பட்டிகை சொத்தை அடமானம் பெற்றதை தவிர சொத்தின் உரிமை குறித்து கேள்வி கேட்பதற்கு எங்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குப் பட்டிகை சொத்து கணபதியார் பிள்ளைக்கு உரிமைப்பட்டு அவர் இறந்த பின்பு வாதிகளுக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் அடமானம் பெற்றதை தவிர வேறு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது மற்றும் எனது தகப்பனாருக்கு எது சொந்த ஊர் என்றால் மகாராஜபுரம். நான் பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ட்ரஸ்டில் உறுப்பினராக உள்ளேனா என்றால் எனது தகப்பனார் உறுப்பினராக இருந்தார்.

நான் எதிருரை மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ட்ரஸ்டுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு பட்டிகை சொத்து மகாராஜபுரம் ஸ்ரீ வீரமார்த்தாண்ட விநாயகர் வகைக்கு தனித்து உரிமைப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து நீக்கி மீதமுள்ள 15 சென்ட் தான் மேற்படி மகாராஜபுரம் ஸ்ரீ வீர மார்த்தாண்ட விநாயகர் வகைக்கு

தனித்து உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து நீக்கி மீதமுள்ள 15 சென்ட் தான் மேற்படி மகாராஜபுரம் ஸ்ரீ வீர மார்த்தாண்ட விநாயகர் வகைக்கு தனித்து உரிமைப்பட்டது என்பதால் வாசாஆ 6ல் கூட்டு பட்டாவில் அவர்கள் பெயர் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிவிப்பு கொடுப்பதற்கு முன்பாக வழக்கின் வாதி மீனாட்சி சுந்தரம் அடமான சொத்தினை திரும்பிக் கேட்க என்னை சந்தித்தார் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்துக்கும் மேற்படி மகாராஜபுரம் ஸ்ரீ வீர மார்த்தாண்ட விநாயகர் வகைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பும் அடமானத் தொகைக்கு வட்டி கேட்டு வாதிக்கு இதுவரை அறிவிப்பு அனுப்பவோ அல்லது வழக்கு தாக்கல் செய்யவோ இல்லை என்றால் சரிதான். நானோ எனது தந்தையோ மேற்படி கோவில் சம்மந்தமாக செலவு செய்வதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வழக்கில் கேட்டுக்கொண்ட படி வாதிகள் அடமான சொத்தை திருப்புவதற்கு உரிமைப்பட்டவர்கள் என்றாலும் அடமான தொகையை திருப்பிக் கொடுத்தால் அடமான சொத்தை திருப்பி எழுதி கொடுப்பதற்கு நான் கடமைபட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கின் வாதிகள் அடமான தொகையை என்னிடம் நேரடியாகவோ இந்நீதிமன்றத்திலோ கட்டுவதற்கு தயாராக உள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**